DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 08.09.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.17/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW.3 |
| Name | : | பழனி |
| Father Name | : | ஆண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 08.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கொலப்படிகாட்டில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்பதால் தெரியும். நான் தினசரி எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்று வருவேன். சுமார் 4–5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் போலீசார் எஸ்டேட்டில் அ.சா.1–ற்கும் மற்றும் ஆஜர் எதிரிக்கு சண்டை பற்றி தெரியுமா என்று கேட்டார்கள் அதைபற்றி தெரியாது என்றும், பின்னர் எங்களிடம் கையெழுத்து பெற்றனர். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2–வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த 2–கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2–வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த 2–வது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசுத் தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டுஅனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

கடந்த 14.03.2025-ம் தேதி காலை 07.00 மணியளவில் வேலைக்கு சென்றபோது அங்கு வாட்ச்மேனாக பணிபுரிந்த குப்புசாமி என்பவரும், அண்ணாமலை என்பவர் கையில் கொடுவாளுடன் நின்றுகொண்டிருந்தார். அப்போது குப்புசாமி அண்ணாமலை எஸ்டேட்டில் அத்துமீறி நுழைந்து புல்லினை அருந்ததாகவும் அதனை கேட்டப்போது கெட்டவார்த்தையால் திட்டி அப்படி தான் புல்லை வெட்டுவேன் அத கேட்க நீ யாருடா என்று அண்ணாமலை திட்டி குப்புசாமியை அண்ணாமலை வைத்திருந்த கொடுவாளால் அவரை இடது கையில் வெட்டி விட்டார் என்றும், பின்னர் அங்கிருந்து அண்ணாமலை ஓடிவிட்டதாக என்னிடம் சொன்னார். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் குப்புசாமி தாக்கப்பட்டது குறித்து சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர், மாதிரி வரைபடம் ஆகிவற்றை தயார் செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இல்லை.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.